[16th November 1957

THE HON. SRI M. A. MANICKAVELU : அங்கத்தினர் அவர்கள் கொடுக்கும் தகவலுக்கும் எனக்கு கிடைத்திருக்கும் தகவலுக்கும் வித்தியாசம் இருக்கிறது. நான் சொன்னேன், அங்கு இரண்டு மூன்று மாதங்களாக அப்படி ஒன்றும் கிடையாது என்று. 30-10-57-ல் இருந்து 2-11-57-ல் தான் மூன்று பேர்கள் இறந்துவிட்டார்கள் என்று சொன்னேன். அதுதான் என் தகவல்.

SRI K. RAMACHANDRAN : மந்திரியவர்கள் கொடுக்கக் கூடிய தகவல் எனக்கு ஆச்சரியத்தை விளைவிப்பதாயிருக்கிறது. ஆனால் யதார்த்தமாக 100 பேர்கள் வரையிலும் இறந்திருப்பதாகச் சொல்வதால் இதைப் பரிசிலனை செய்து உண்மையைத் தெரிந்து கொள்ள அரசாங்கம் முற்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : மேலும் விவரங்கள் வரவழைக்கப்படும். இன்னொன்று நான் சொல்ல விரும்புகிறேன். அதாவது, ஸ்மால் பாக்ஸ்-ல் இறந்து போகிறதை ஜனங்கள் சொல்ல மறுக்கிறார்கள். அப்படி ஒரு வேளை மறைத்திருக்கக்கூடும்.

MR. SPEAKER : அடுத்தபடியாக ஸ்ரீ அண்ணாமலை அவர்களை ப்ரைவேட் நோட்டீஸ் கொஸ்டின் கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

Threatening by Forest Officers.

* 2 *Q.*—SRI S. M. ANNAMALAI : Will the Hon. the Minister for Home be pleased to make a statement about the threatening of the people of Salathur village, Vellore taluk, by the Forest Officers of Santhavasal Range, Polur taluk?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Salathur village of Vellore taluk is an abandoned village-site in Thellai Reserve Forest of Santhavasal Range. About six years ago, seven Malayalee families entered this abandoned village and constructed a few huts in it. They also cleared valuable sandalwood and other growth and started cultivation over 19½ acres. The encroachers were charged under the Madras Forest Act by the Forest Department and they were convicted by the Sub-Magistrate, Polur. Again two more Malayalees encroached on the area and they were also charged and convicted by the Sub-Magistrate, Polur.

At present there are no encroachments in the area, but the villagers continue to reside in the village-site and refuse to quit in spite of repeated requests by the beat subordinates to leave the sites. The Forest subordinates have not threatened the encroachers at any time as alleged, but they were informed that action will be taken against them under the Forest Act if they refuse to quit.

Closure of Maha Ganapati Mills.

9-50 a.m. * 3 *Q.*—SRI M. KALYANASUNDARAM : திருச்சி ஜில்லாவில் புதுக்கோட்டை டிவிஷனிலுள்ள மகா கணபதி மில் இரண்டு மாத காலமாக சட்ட விரோதமாக மூடப்பட்டிருப்பதினால் 200 தொழிலாளர்களுக்குமேல் பட்டினி கிடந்து வருவது மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அப்படியானால் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன் ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு ஷார்ட் நோட்டீஸ் கேள்வி கொடுத்திருந்தார்கள், அது இன்றைக்கு வரும் என்று நினைத்திருந்தேன். இது அட்ஜுடிகேஷனுக்கு விடப்பட்டிருக்கிறது. செக்ஷன் 10-3-யில் கதவடைப்பு நீக்கப் படவேண்டுமென்று ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.